செ.வெ.எண்: 40 நாள்: 13.02.2017

# புதுக்கோட்டை மாவட்டத்தில் அரசு மற்றும் தனியார் நிலங்களில் உள்ள சீமைக்கருவேல மரங்களை 21.02.2017க்குள் முற்றிலுமாக அகற்ற வேண்டும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில், சீமைக்கருவேல மரங்களை முற்றிலுமாக அகற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்படவேண்டிய பணிகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (13.02.2017) நடைபெற்றது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது:

சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவின் படி, சீமைக்கருவேல மரங்களை முற்றிலுமாக அகற்ற உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் உள்ள சீமைக்கருவேலமரங்களை முற்றிலுமாக அகற்றும் வகையில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சம்மந்தப்பட்ட அரசுத்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சியரகத்தில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் சீமைக்கருவேல மரங்களால் கால்நடைகள், மனிதர்கள் மற்றும் சுற்றுச்சூழல்கள் ஆகியவைகளுக்கு ஏற்படும் தீமைகள் குறித்து செய்தித்தாள்கள், துண்டுப்பிரசுரங்கள், உள்ளூர் தொலைக்காட்சிகள், ஒலிப்பெருக்கிகள், விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மூலம் பொதுமக்களுக்கு விளம்பரப்படுத்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் நமது மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் உள்ள பொதுப்பணித்துறை, ஊரக வளர்ச்சித்துறை, வருவாய்த்துறை, நெடுஞ்சாலைத்துறை, இந்து சமய அறநிலையத்துறை, கால்நடைப்பராமரிப்புத்துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் பிற துறைகளின் கட்டுப்பாட்டில் உள்ள சீமைக்கருவேல மரங்களை 21.02.2017 க்குள் முற்றிலுமாக அகற்ற வேண்டும். மேலும் தனியார் நிலங்களில் உள்ள சீமைக்கருவேலமரங்களை பட்டாதாரர்கள் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் அகற்றவில்லையெனில் சம்மந்தப்பட்ட துறைகளின் மூலம் அகற்றப்பட்டு அதற்கான செலவுத்தொகை சம்மந்தப்பட்டவர்களிடம் வசூல் செய்ய வேண்டும். மேலும் அனைத்து துறை அலுவலர்களும் தங்களது துறைகளின் மூலம் சீமைக்கருவேல மரங்கள் அகற்றப்பட்டதன் விபரம் குறித்த அறிக்கையினை 22.02.2017 காலை 11 மணிக்குள் அதற்குரிய படிவத்தில் பூர்த்தி செய்து மாவட்ட நிர்வாகத்திடம் அளிக்க சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**